## பிரிவு – 6

## திட்ட நிதி

**(i) இருக்கின்ற வாய்ப்புகள்:**

**3.6.1.** உள்ளாட்சி மன்றங்களின் மூலதன முதலீட்டுத் தேவைகள் குறிப்பாக குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு ஆகியவற்றிற்கான மூலதன முதலீட்டுத் தேவைகள், ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்தும் அரசிடமிருந்தும் கடன் பெறப்படுவதன் மூலம் நிறைவு செய்யப்படுகின்றன. இக்கடன்களை, தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியம், அரசு அளிக்கும் உத்திரவாதத்தின்பேரில், உள்ளாட்சி மன்றங்களின் சார்பில் திரட்டுகிறது. இவை தவிர, நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்கு, நகராட்சி நகர்ப்பகுதி வளர்ச்சி நிதியிலிருந்து கடன்களும் மானியங்களும் கிடைக்கினறன. இத்திட்டத்தின் கீழ், இந் நிதியிலிருந்து செயல்பாடு மற்றும் தேவை அடிப்படையில் மூலதன மானியங்களுக்கும் வழங்கப்படுகின்றன. தகுதி வாய்ந்த உள்ளாட்சி மன்றம் ஒன்றுக்கு ஒரு பணித்திட்டத்திற்காகும் மூலதனச் செலவில் 75 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது. இதில், உள்ளாட்சி மன்றத்தின் நிதி நிலை குறித்த கடந்த ஐந்தாண்டுக்கான வரலாற்றை உள்ளடக்கி, நிதி செயல்பாட்டுத் திட்டம் ஒன்று (Financial Operating Plan) தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால், வருவாய் வசூல் கட்டணத் திருத்த நடவடிக்கைகள், மூலதன முதலீட்டு முடிவுகள் ஆகியவை தொடர்பான மாற்று அனுமானங்கள் என்பதன் கீழ், ஒரு ஐந்தாண்டு காலச் சூழ்நிலை பற்றியதொரு முன் மதிப்பீடு அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி 1996 செப்டம்பரில் முடிவடையவிருக்கிறது. நகராட்சி நகர்ப்பகுதி வளர்ச்சி நிதியை தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சி நிதி என்ற பெயரில் ஒரு நிதி நிறுவனமாக நிலை உயர்த்த கருதப்பட்டுள்ளது. இது, கடன் நிதிகள், மானிய நிதிகள், என்ற இரு பிரிவுகளைக் கொண்டிருக்கும். பலவீனமான நிதி ஆதாரமும் பணி அளவுகளையும் கொண்டுள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு மானிய நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கப்படும். "இன்ப்ராஸ்ட்ரக்ஸர் லீஸிங் பினான்சியல் சர்வீஸ் நிறுவனம், ,இந்தியத் தொழில் கடன்–முதலீட்டுக் கழகம், வீட்டு வசதி மேம்பாட்டு நிதியுதவிக் கழகம், ஆகியவற்றின் பங்கேற்புடனும் தமிழ்நாடு அரசின் சம பங்கு மூலதனத்துடனும், இந்நிதிகள் சொத்துக்களை நிருவகிக்கும் நிறுவனம் ஒன்றினால் நிருவகிக்கப்படும். சிறு நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமான சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கடன் உதவி கிடைக்கிறது. அதே போன்று 1989 ஆம் ஆண்டில் கம்பெனிகள் சடடத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்பகுதி நிதி–அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் (TUFIDCO) என்ற நிறுவனம், குறைந்த வருமானத் தொதியினர் வாழும் பகுதிகளின் மேம்பாட்டை நோக்கமாகக் கொண்ட திட்டங்களில் முதலீடுகள் செய்ய உதவுகிறது. இந் நிறுவனத்தின் பங்கு மூலதனம் ரூ.10 கோடி ஆகும்; தமிழ்நாடு அரசின் சம பங்கு மூலதனம் 51 சதவீதம் ஆகும். எஞ்சியுள்ள பங்கு மூலதனம் சில உள்ளாட்சி மன்றங்களிடமும் வீட்டு வசதி – நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்திடமும் உள்ளது. தற்போது இந்நிறுவனத்தின் மூலம், குறைந்த செலவிலான துப்புரவு வசதித் திடடம், நகர்ப்பகுதி வறுமை ஒழிப்புத் திட்டம், நேரு வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் இவற்றின் துணைத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு நிதியுதவி அளிக்கப் படுகிறது. இந்நிறுவனம் இத் திட்டப்பணிகளுக்கு, "ஹட்கோ" நிறுவனக் கடன்கள் கிடைக்க வழிவகை செய்கிறது. சென்னைப் பெருநகர் பகுதிக்குள் அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில் மகாநகர் திட்டத்தின் கீழ்த் திட்டப் பணிகளை நிறைவேற்ற நிதியுதவி அளிப்பதற்காக 1996 ஆம் ஆண்டில் பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம், திடடச் செலவில் 50 சதவீதம் அளவுக்கு நிதியுதவி அளிப்பதுடன் எந்தவொரு திட்டப் பணிக்கும் 10 சதவீத அளவுக்கு மானியமும் அளிக்கிறது. பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் திட்டச் செலவு முழுமைக்கும் நிதியுதவி வழங்க திட்டமிட்டு வருகிறது. இந்நிறுவனம் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், இது மூலதனச் சந்தைகளிலிருந்து கடன் பெறுவதற்குத் தடை எதுவும் இல்லை.

## (ii) நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்குள்ள அதிகாரம்:

**3.6.2.** மத்திய, மாநில அரசுக் கடன்கள் 1944 ஆம் ஆண்டுப் பொதுக்கடன் சட்டம் மற்றும் 1946 ஆம் ஆண்டுப் பொதுக்கடன் விதிகளுக்கு உட்பட்டவையாகும். உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரை கடன்கள் நாளது வரையில் திருத்தப்பட்டவாறான 1937 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் கடன் விதிகளால் நிருவகிக்கப்படுகின்றன. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், கட்டுமானப் பணிகள், நிலம் கையகப்படுத்துதல், அரசுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துதல், அல்லது ஏற்கெனவே திரட்டப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றிற்குத் தேவையான தொகைகளை, கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுவதன் மூலம் அல்லது வரிகள், தீர்வைகள், கட்டணங்கள் வரவேண்டிய பாக்கிகள், தொகைகள் ஆகியவற்றை முழுவதையும் அல்லது அவற்றில் ஏதேனும் ஒரு பகுதியைப் பிணையம் வைப்பதன் மூலம் நிதி ஆதாரங்களைத் திரட்ட, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் அதிகாரம் அளிக்கிறது. ஆனால், மாநில அரசின் முன்அனுமதி அவசியம் என்பது இதன் ஒரு இன்றியமையாத நிபந்தனையாகும். குறிப்பாக, வரம்பு–நிபந்தனைகள், கடன் கால அளவு, தொகை திருப்பிச் செலுத்தும் காலம், முறைகள் ஆகியவை குறித்து மாநில அரசின் ஒப்புதலைப் பெறுவது அவசியமாகும். அதே போன்று பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியத்திற்கும் 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்கழிவு நீரகற்றல் சட்டத்தின் 32 ஆம் பிரிவு தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியத்திற்கும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல்–வடிகால் வாரியச் சட்டத்தின் 34 ஆம் பிரிவு அரசின் உத்திரவாதத்திற்குட்பட்டு நிதி நிறுவனங்களிடமிருந்தும் வெளிச் சந்தைகளிலிருந்தும் கடன்கள் பெறவும், நிதிகள் திரட்டவும் அதிகாரம் உண்டு.

## (iii) உத்திரவாத நடைமுறைகள்:

**3.6.3.** பொது நலப் பணிகளுக்கு, அதாவது ஒப்புதல் அளிக்கப் பெற்ற பொது மேம்பாட்டுக் காரியங்களுக்கு, பெரும்பாலும் மூலதனச் செலவுகளுக்கு, நித நிறுவனங்களிடமிருந்து, வங்கிகளிடமிருந்து அல்லது பொதுமக்களிடமிருந்து கடன்கள் வாங்கும்போது உத்திரவாதங்கள் அளிக்கப்படுகின்றன. உத்திரவாதச் செயற்குறிப்புகள், சில்லறைப் பொறுப்புகளுக்கு, நிகரானவையாகும்; சாதாரணமாக, கடனைப் போலவே இவை மறு ஆய்வு செய்யப்படுகிறது. அவ்வப்போது ஏற்படும் செலவுப் பொறுப்புகள் அதிகரிப்பதைக் கருத்தில் கொண்டும் கடந்த காலங்களில சிறு தொகைகளுக்குக் கூட இவை பயன்படுத்தப்பட்டுள்ளதாலும், அரசு, முற்றிலும் வர்த்தக ரீதியிலான பணிகளுக்கு அல்லது தனித்து இயங்கவல்ல இனங்களுக்கு அரசின் உத்திரவாதம் அளிக்கப்பட தேவையில்லை என்று நிதித் துறையின் 6–7–1994 ஆம் நாளிட்ட 552 ஆம் எண் அரசாணையில வரையறுக்கப்பட்டது. இயன்ற அளவில் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களின பேரிலேயே கடன் வழங்கப்பட வேண்டும் என்றும், இது சாத்தியப்படாதபோதுதான் உத்திரவாதம் அளிக்கும் பிரச்சினை எழுகிறது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளது. ஒரு நிறுவனம் போதிய நிதி–வசதியுடையதாயிருப்பின் அந்நிறுவனமே கடனுக்கு உத்திரவாதம் அளிக்கலாம் என்றும் அதனால் அரசு உத்திரவாதத்தின் அவசியம் குறைகிறது என்றும் அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

**3.6.4.** உத்திரவாதம் அளிக்கப்படட தொகைகள் மற்றும் நிலுவையாகவுள்ள அசல் தொகைகள் ஆகியவை பற்றிய விவரங்கள் தமிழ்நாடு அரசின் 1993–94 ஆம் ஆண்டு நிதிக் கணக்குகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த விவர அறிக்கைகள் அடுத்துவரும் வரவு–செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் அவசியமாக சட்ட மன்றத்தில் வைக்கப்படவேண்டும்.

அட்டவணை 3.50 அரசு உத்திரவாதமும் அசல் நிலுவையும்:

(ரூபாய் கோடியில்)

| | நிறுவனம் | உத்திரவாதம் அளிக்கப்பட்ட தொகை | நிலுவையாக உள்ள அசல் |
|---|---|---|---|
| 1. | மொத்தம் | 6303.23 | 3537.70 |
| 2. | சென்னை மாநகராட்சி | 36.00 | 36.00 |
| 3. | சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்–கழிவுநீர் அகற்றல் வாரியம் | 54.58 | 12.42 |
| 4. | தமிழ்நாடு குடிநீா–வடிகால் வாரியம் | | |
| | a) ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து | 300.13 | 240.30 |
| | b) ஹட்கோ நிறுவனத்திடமிருந்து | 37.30 | 27.35 |
| 5. | சென்னைப் பெருநகா வளர்ச்சிக் குழுமம் | 4.05 | 0.60 |
| 6. | கோயம்புத்தூா் மாநகராட்சி | 11.68 | 10.54 |

3.6.5. வளர்ச்சிப் பணிகளுக்காக, கடன் வேண்டி வரும் எந்த ஒரு செயற்குறிப்பிற்கும் அனுமதியளிப்பதால், பொதுவாக கட்டணங்களையும் வீதங்களையும் திருத்தியமைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இன்னும் சில நேர்வுகளில், புதிய வரிகள் அல்லது கட்டணங்கள் விதிக்கவேண்டிய நிலை கூட ஏற்படுகிறது. இது, நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு மிக முக்கியமானதொரு வருவாய் ஆதாரமாக விளங்குகிறது. சொத்து வரி நேர்வில் தற்போதுள்ள விதிகளின்படி, இந்த வரி, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படவேண்டும். ஆனால், அவ்வாறு செய்யப் படுவதில்லை என்பது வேறு விஷயம். அதே போன்று, சுற்றுச்சூழல் பணிகளைப் பொறுத்தவரையில், உள்ளாட்சி அமைப்புகள், பயன்படுத்துவோர் கட்டணங்களை விதிக்க அல்லது உயாத்த துணை விதிகளை இயற்றிக் கொள்ளலாம். உதாரணமாக உலக வங்கி நிதியுதவி பெறும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் – கழிவு நீரகற்றல திட்டத்தின் நிபந்தனைகளில் ஒன்று, திட்டம் செயற்படுத்தப்படும் நகரங்களில் குடிநீர் கட்டணங்களைத் திருத்தியமைப்பது ஆகும். இந்த ஒப்பந்தத்திற்கிணங்க, மதுரை, கோயம்பத்தூர், சேலம் ஆகிய திட்ட நகரங்களில் கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டன. மதிப்பீட்டு நெறிமுறைக்கிணங்க ஏதேனும் ஒரு திட்டச் செயற்குறிப்பு, உததிரவாதம் வேண்டி நிதித் துறைக்கு அனுப்பப்படும்போதெல்லாம், கட்டணங்களும் வீதங்களும் திருத்தியமைக்கப்படும் என்று பொறுப்புறுதி அளிக்கப்படும் நேர்வுகளுக்குப் பொதுவாக முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஏனெனில், உத்திரவாத நிபந்தனைகளின்படி, பொறுப்புறுதி அளிக்கப்படாத நேர்வுகளால் அரசுக்கு நிதிச் சுமை அதிகரிக்கும்.

அட்டவணை 3.51 திட்டங்களுக்கு நிதியுதவி அளித்தல் (அவசியத் தேவையளவு அடிப்படையில் முக்கிய குடிமைப் பணிகளை நிறைவேற்றுவதற்கான மூலதன முதலீடு (1995–96 விலை நிலவரப்படி)

(ரூபாய் கோடியில்)

| துறை | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | ஊராட்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| குடிநீர் வழங்கல் | 416.23 | 168.78 | 133.39 | ---- | 198.24 | 916.64 |
| கழிவு நீரகற்றல்–துப்புரவு | 697.26 | 414.74 | 100.97 | ---- | 257.46 | 1470.43 |
| திடக்கழிவு நிருவாகம் | 32.31 | 25.91 | 18.75 | ---- | 22.40 | 99.37 |
| சாலைகள் | 229.23 | 99.43 | 153.34 | 756.79 | 1376.18 | 1858.17 |
| வெள்ளநீர் வடிகால்கள் | 268.55 | 157.28 | 49.12 | --- | 191.56 | 666.51 |
| தெருவிளக்கு வசதிகள் | 20.96 | 16.82 | 49.90 | --- | 150.52 | 238.20 |
| மொத்தம் | 1664.54 | 882.96 | 505.47 | 756.79 | 2196.36 | 5249.32 |

3.6.6. மேற்படி அட்டவணை, முக்கிய குடிமைப் பணிகளுக்கான மூலதனத் தேவைகளைச் சுட்டிக்காட்டுகிறது. முந்தைய பக்கங்களில், பண வீக்கத்திற்கு வகை செய்து ஐந்து ஆண்டுகளுக்கு (1997–2002) இந்த முதலீட்டை பிரித்துக் காட்டியுள்ளோம். நிதி வகையில் அநேகமாக தனித்து இயங்கவல்ல மாநகராட்சிகளைப் பொறுத்த வரையில், சமபங்குகளை அல்லது கடன் பத்திரங்களை வெளியிடலாம் அல்லது நிதி நிறுவனத்தை அணுகலாம். நல்ல நிதி ஆதாரங்களைக் கொண்ட நகராட்சிகளுக்கும் இது பொருந்தும். நிதி நிலைமைகளைப் பொறுத்து மாநகராட்சிகளும், நகராட்சிகளும், பலன் தரத்தக்கத் திட்டங்களையும், சேவை அடிப்படையிலான திட்டங்களையும் கலந்து மேற்கொள்ளலாம். நல்ல நிதி வசதிகள் இல்லாத நகராட்சிகளையும் பேரூராட்சிகளையும் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட கால அளவில் திருப்பிச் செலுத்தத் தக்க கடனையும் மானியங்களையும் அரசிடமிருந்து பெறலாம் எனக் கருத்து தெரிவிக்கப்படுகிறது. கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத அளவுக்கு மோசமான நிதி நிலைமையில் உள்ள ஊராட்சிகள், பெரும் அளவில் அரசின் நிதியுதவியை நம்பியிருக்க வேண்டியிருக்கும். இந்த இனங்களிலெல்லாம் குறைந்த பட்சம் இயக்கப் பராமரிப்புச் செலவுகளை ஈடுகட்டவாவது பயனீட்டாளர்களிடமிருந்து கட்டணங்கள் வசூலிக்கலாம். சாத்தியமான இடங்களில் தனியார் பொறுப்பில் விட்டுவிடலாம். இக்கருத்துகளும் மூலதன நிதித் தேவையும் குறித்து தனியாக ஆராயப்பட்டுள்ளது.